Registered as a Newspaper

ரெலிகுளோப்
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள்,
நல்லவர்கள்
ரெலிகுளோப்
ஆர். ஜி. கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ் நகர்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

யாழ்நகரில்
பத்து ரெலிபோன்களை
சேவையில் ஈடுபடுத்தி
முழுமையாக ரெலிபோன்
சேவையிலேயே கண்ணும்
கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிபோன்: 25088 - பத்து
சமாந்தர லைன்கள்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு புரட்டாதி மீ 28 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 9 (14-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-280



யாழ் பெரிய கோயிலில் பொதுமக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்த லெப்டினன்ட் கேர்ணல் விக்ரரின் பூதவுடல். (உ)

# விக்ரர் மரணம் கேட்டு

# சோகத்தில் சோர்ந்தது யாழ் குடாநாடு

## பூதவுடலிற்கு அஞ்சலி செலுத்த மக்கள் கூட்டம் முண்டியடித்தது

யாழ்ப்பாணம், அக்டோபர் 14

மன்னார், அடம்பனில் நடந்த மோதலில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேர்ணல் விக்ரர் மரணம் அடைந்த செய்தி கேட்டு யாழ்ப்பாணக் குடாநாடு நேற்றுச் சோகத்தில் சோர்ந்தது.

குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு மக்கள் துக்கம் அனுஷ்டித்தனர்.

விக்ரரின் பூதவுடல் யாழ்நகர் கொண்டுவரப்பட்ட செய்தி அறிந்து அஞ்சலி செலுத்த ஆயிரக்கணக்கான மக்கள் முண்டியடித்துக் கொண்டு அவரது பூதவுடல் வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு சாரி சாரியாக விரைந்தனர்.

சனிக்கிழமைச் ஷெல் தாக்குதலினைத் தொடர்ந்து இரு நாட்களாக வெறிச்சோடிக் கிடந்த யாழ். நகரம் - நேற்றுக் காலை ஆரவாரத்துடன் களைகட்டியது. என்னும் மன்னாரில் களப்பலியான இளைஞர்களின் மரணச் செய்தி மெல்ல மெல்லப் பரவ நகரம் சோபையிழந்து சோகமயமாயிற்று.

யாழ்நகரிலும் குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் வீதிகள் தோறும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருக்கின்றன. வாழைகள், தோரணங்கள் துக்கத்தை பறைசாற்றி நிற்க ஆங்காங்கே ஒலிபெருக்கிகளில் சோக கீதங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

மக்கள் சந்திகளில் கூடி நின்று மன்னார் மாவட்டத் தளபதி விக்ரரையும் அவருடன் சேர்ந்து போராடி வீரமரணம் எய்திய ரேமையும் பற்றிப் பேசிக் கொண்டனர்.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்கள் சந்திகளில் தரித்து நின்று மண்ணுக்காக மரணித்த போராளிகளின் பெருமையையும், வீரத்தையும் மக்களுக்கு பறைசாற்றின.

நேற்று இரவிரவாக நகரின் பல பகுதிகளிலும் வாழைகள், தோரணங்கள் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

வீர மரணமான விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்டத் தளபதி விக்

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கொலையுண்ட சிப்பாய்களின் சடலங்கள் இன்று யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம், அக். 14

மன்னார் அடம்பனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையில் ஞாயிற்றுக்கிழமை நடந்த மோதலின்போது கொலையுண்ட சிப்பாய்கள் சிலரின் சடலங்கள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்படலாம் எனத் தெரிய வருகிறது.

கொண்டு வரப்படும் சடலங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.

அடம்பன் தாக்குதலின் போது இரண்டு சிப்பாய்கள் புலிகளினால் கைது செய்யப்பட்டனர். அவர்களும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படுவார்கள்.

அடம்பனில் அரச படைகளிடம் கைப்பற்றப்பட்ட பல ஆயுதங்களும் மக்களின் பார்வைக்காக வைக்கப்படுமாம். (அ-10)

## புதுக்குடியிருப்பில் 4 சிப்பாய்கள் பலி

### தமிழீழ இராணுவம் அறிக்கை

யாழ்ப்பாணம், அக்.14

ஞாயிற்றுக் கிழமை ஒட்டி சுட்டான் இராணுவ முகாமில் இருந்து ரோந்து வந்த சிப்பாய்களை எதிர்த்து புதுக்குடியிருப்பு ரோட் சுடலைக்கு அருகாமையில் தமிழ்ஈழ இராணுவம் சிலிண்டர் தாக்குதல் நடத்தியது.

இதில் ஒரு ஜீப் முற்றாக நாசமாக்கப்பட்டது. அதில் வந்த நான்கு சிப்பாய்கள் அந்த இடத்தில் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு தமிழ் ஈழ இராணுவம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விவரம் வருமாறு:

கடந்தமாதம் முல்லைத்தீவு — சிலாவத்துறை கடற் பிராந்தியத்தில் எமது போராளிகளுக்கும் அரச கடற்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று தோழர்கள் வீர மரணம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் நேற்றும்

## பகுதியில் மோதல்

யாழ்ப்பாணம், அக்.14

மன்னார் உயிலங்குளத்துக்கும் மடுவுக்கும் வந்த சிப்பாய்களை நோக்கி நேற்றும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதல் காரணமாக உயிலங்குளத்துக்கு வந்த சிப்பாய்கள் பின் வாங்கிச் சென்றனர்.

மடுவுக்கு வந்த சிப்பாய்களுடன் புலிகள் தொடர்ந்து மோதல்

(4 ஆம் பக்கம் பார்க்க)



யாழ் பெரிய கோயிலுக்கு விக்ரரின் பூதவுடல் எடுத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

## விக்ரருக்கும் ரேமுக்கும் அஞ்சலி

யாழ்ப்பாணம், அக். 14

விக்ரர், ரேம் ஆகியோரின் மரணங்கள் தொடர்பாக தமிழீழவிடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

ஞாயிற்றுக்கிழமை மன்னார் அடம்பனில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலின் போது அம் மண்ணின் விடிவிற்காக இறுதிவரை போராடி வீரமரணமடைந்த அம் மண்ணின் மைந்தர்கள்:-

1. மன்னார் மாவட்டப் பொறுப்பாளரும், மத்திய குழு உறுப்பினருமாகிய லெப்டினன்ட்கேர்ணல் விக்ரர் (மருசலீன் பியூஸ்லஸ் – மன்னார்)

2. 2 ஆவது லெப்டினன்ட்-ரேம் (செல்லையா செல்வம் மன்னார்) ஆகியோருக்கு எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அடம்பன சமரில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டவை

யாழ்ப்பாணம் அக். 14

மன்னார் அடம்பன் தாக்குதலின்போது இராணுவ தரப்பினரிடம் இருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட சடலங்கள் ஆயுதங்கள் தொடர்பாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்;

கைப்பற்றப்பட்டவை வருமாறு;

1. இராணுவத்தினரின் 16 சடலங்கள்.

2. 15 ஏ. கே ரக ரைபிள்கள்.

3. 40 க்கும் மேற்பட்ட ஏ- கே ரைபிள் ரவைக் கூடுகள், 6 000 க்கும் மேற்பட்ட ஏ. கே ரைபிள் ரவைகள்.

4. 1 கோல்ற் கொமாண்டோ ரைபிள்.

5. ஏ. கே எல்.எம்.ஜி ரவைக் கூடுகள் சில.

6. 2 அங்குல மோட்டார் ஒன்றும் சில மோட்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தால் வேண்டாம்

யாழ்ப்பாணம், அக்.14

மன்னார் மாவட்டப் பொறுப்பாளரின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிப்பதற்காக இன்று ஹர்த்தால் நடத்த வேண்டாம். கடைகளை திறவுங்கள். விரும்பினால் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு உங்கள் துயரைத் தெரிவியுங்கள்.

இப்படித் தமிழீழ விடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துக்கம் அனுஷ்டிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், அக். 14

வீர மரணமடைந்த, தமிழீழ விடுதலைப் புலிகளின், மன்னார் பிராந்திய தளபதி விக்ரருக்கும் வீர மரணமடைந்த ரேமுக்கும் யாழ் குடாநாடு முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தமிழ் ஈழ மக்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் சகல வர்த்தக நிறுவனங்களும் உணவு விடுதிகளும் இன்று மூடப்பட்டிருக்கும் என்றும் மினிபஸ் உரிமையாளர்கள், அரசாங்க ஊழியர்கள் பாடசாலை மாணவமணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் எம் மண்ணின் மீட்புக்காக வீர மரணமடைந்த விக்ரருக்காகவும், ரேமுக்காகவும் துக்கம் அனுஷ்டிக்கும் படியும் கோரப்பட்டுள்ளது. (இ-10)

### ஒச்சந்தி ஒளி



ஆஸ்பத்திரி ஸ்தம்பிச்சாப்போலை அரசாங்கத்துக்கு அக்கறை வரும் எண்டது சந்தேகம் தான்...!

## யாழ் ஆஸ்பத்திரி ஸ்தம்பிக்கும் அபாயம்

யாழ்ப்பாணம், அக்.14

யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்கள், டாக்டர்களின் தொடர் எதிர்ப்பியக்கப் போராட்டத்தின் முதல் நடவடிக்கையாக இன்று அவசர நோய் சிகிச்சைப் பிரிவு, அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு தவிர ஆஸ்பத்திரியின் ஏனைய பிரிவுகளின் வேலைகள் இன்று ஸ்தம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் நாளான நாளை இரண்டாம் கட்ட நடவடிக்கையாக வெளி நோயாளர் பகுதி முற்றாக மூடப்பட்டிருக்கும். சகல சிகிச்சைப் பிரிவுகளும் கிளினிக்குகளும் மூடப்பட்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## பல அமைப்புகள் அஞ்சலி

யாழ்ப்பாணம், அக். 14

விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் விக்ரர், ரேம் ஆகியோரின் மறைவு குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ இராணுவம், தமிழீழ செம்படை, யாழ். தொழில் நுட்பக் கல்லூரி, பொறியியற்றுறை மாணவர் ஆகிய அமைப்புக்கள் வீரவணக்கமும் அஞ்சலியும் செலுத்தியிருக்கின்றன. (உ)

### சுபநேரம்

14-10-1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.32 முதல் 12.02வரை
ராகுகாலம்:
3.02 முதல் 4.32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## மன்னார் வவுனியாவில் ஊரடங்கு

யாழ்ப்பாணம், அக்.14

மன்னார், வவுனியா மாவட்டங்களில் நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம், இன்று பிற்பகல் 2 மணியுடன் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## யாழ் ஆஸ்பத்திரி

# டாக்டர்கள், ஊழியர்கள்

# தொடர் எதிர்ப்பியக்கம்

## இன்று முதல் நடத்துவதற்கு முஸ்தீபு

யாழ்ப்பாணம் அக். 14

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து இராணுவம் வாபஸ் வாங்கப்படும் வரை யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஊழியர்கள் இன்றுமுதல் தொடர் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளனர்.

இது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவித்தல் ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட மோட்டோ ஷெல் தாக்குதலினால் மீண்டும் யாழ் ஆஸ்பத்திரிக் கட்டடம் சேதம் அடைந்ததைத் தொடர்ந்து, யாழ் போதனா ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்கள் கூட்டாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை நேற்று அனுப்பி வைத்தனர்.

அந்த மகஜரிலே மேற்கண்ட அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஆஸ்பத்திரி மீது நடத்தப்படும் தாக்குதல்கள் பற்றி திரும்பத் திரும்ப உங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்து உள்ளோம்.

கடந்த 11ஆம் திகதி மாலை மீண்டும் யாழ் ஆஸ்பத்திரிக் கட்டடம் கோட்டையில் இருந்து வந்த மோட்டார் ஷெல் தாக்குதலில் சேதம்

(4ஆம் பக்கம் பார்க்க)



யாழ் ஆஸ்பத்திரியில் சனியன்று விழுந்த ஷெல் குண்டினால் மேக நோய் தடுப்பு சிகிச்சைப் பிரிவின் ஆய்வுகூடம் சேதமடைந்திருப்பதையும் சுவர் ஒன்று சரிந்து விழுந்திருப்பதையும் இடப்புறப் படத்திலும்,

கட்டடத்தின் கூரைப்பகுதியை ஷெல் குண்டு பதம் பார்த்திருப்பதை வலப்புறப் படத்திலும் காணலாம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட விரோத மின்பாவனை குறைந்துள்ளது

யாழ்ப்பாணம், அக். 14 சட்ட விரோத மின் பாவனை இப்போது பெருமளவு குறைந்துள்ளதாக யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கணக்காளர் ம. ராஜேந்திரன் தெரிவித்தார்.

பத்திரிகைகள், பொது மக்கள், பொதுநல ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உதவியினுலேயே சட்ட விரோத மின்பாவனையைக் குறைக்கக் கூடியதாக இருந்தது என்ருர் அவர்.

நல்லூர் உப அலுவலகத்தால் மாதாந்தம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா இலங்கை மின்சார சபைக்கு கட்டவேண்டி இருந்தது.

ஆகஸ்ட் மாதம் தொக்கம் இத் தொகை 1 லட்சமாக குறைந்துள்ளது.

மேலதிகமாக ஒன்றரை லட்சம் ரூபா சட்ட விரோத மின்பாவனையாலேயே முன்னர் செலுத்த வேண்டியிருந்தது என்றும் அவர் தெரிவித்தார். (உ-5)

## கண்ணீர் அஞ்சலி

மட்டக்களப்பு,அக்.14 மட்டக்களப்பு பஸ் நிலைய குண்டு வெடிப்பு சம்பவதினமன்று பலியாகிய பொதுமக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது கண்ணீர் அஞ்சலியைச் செத்திலுயுள்ளது.

இது தொடர்பாக சுவரொட்டிகள் வெளியிடப் பட்டுள்ளன. (உ-21)

# மின் கட்டண நிலுவை ரூ. 350 லட்சத்தை செலுத்துவது எப்படி?

### உயரதிகாரிகள் கூட்டத்தில் ஆலோசனை

யாழ்ப்பாணம், அக். 14 இலங்கைமின்சாரசபைக்குயாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை செலுத்த வேண்டிய 350 லட்சம் ரூபா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் உள்ளூராட்சி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை மின்சார சபை செய்துகொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து உள்ளூராட்சி அமைச்சு இச்சந்திப்பை ஒழுங்கு செய்திருந்தது.

இச்சந்திப்பில் இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகள், அமைச்சின் உயர் அதிகாரிகள், உட்பட, யாழ் அரச அதிபர், அபிவிருத்திச்சபை உதவிச் செயலாளர், பிரதம கணக்காளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சட்ட விரோத மின் பாவனையால் யாழ் அபிவிருத்திச் சபையின் 26 உப அலுவலகங்களின் மூலம் இலங்கை மின்சார சபைக்கு இவ்வருட ஜூலை மாதம்வரை 350 லட்சம் ரூபாவரை செலுத்தவேண்டிய கடன் பாக்கியாக உள்ளது.

சட்டவிரோத மின் பாவனையால் 85ஆம் ஆண்டு 120 லட்சம் ரூபாவும் 86ஆம் ஆண்டு 70 லட்சம் ரூபாவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பாவனையாளரிடமிருந்து அறவிடவேண்டிய கட்டணமாக 170 லட்சம் ரூபா பாக்கியுமுள்ளது என இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருப்பதாலேயே உப அலுவலகங்களில் பணம் ரொக்கமரக வைத்திருக்க முடியாதநிலை ஏற்பட்டது என்றும் பாவனையாளர் உடன் கட்டணம்செலுத்தாதது, சட்ட விரோத மின்பாவனை ஆகியவை ஏற்பட்டன என்றும் அமைச்சுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது. (இ-5)

## மக்கள் முகம்

### ஸ்கந்தா பழைய மாணவர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், அக்.14 சுன்னுகம் ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாகிகள் வருமாறு.

போஷகர்: அதிபர் திரு. பொன். நாகரத்தினம் தலைவர் திரு. எம். இரத்தினம் உதவித் தலைவர்கள்: திரு. எஸ். துரைராஜா திரு. அ. தற்பரானந்தன்,செயலாளர்: திரு.எஸ்.விபுலானந்தன், உதவிச் செயலாளர் திரு. எஸ். கதிர்காமநாதன். பொருளாளர்: திரு. எஸ். கந்தசாமி.

பதினைந்து அங்கத்தவர்கள் செயற்குழுவில் தெரிவு பெற்றனர். (ஒ)

### நலன்புரிச் சங்கம்

காங்கேசன்துறை,அக்.14 தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை நலன்புரிச் சங்க புதிய நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை (வைத்திய அதிகாரி) உபசெயலாளர். திரு. எம். கனகரத்தினம், செயலாளர். திரு. செ. யோகர், உப செயலாளர். திரு. வ. குணபாலன், பொருளாளர். திரு. எஸ். நல்லதம்பி, உப பொருளாளர்கள். திரு. சி. இராசலிங்கம், திரு. த. சிவலட்சுமி.

11 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. (இ-68)

### சுவரொட்டி

மட்டக்ளப்பு, அக் 14 மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் வீர மரணமடைந்த தமிழீழ விடுதலை போராளிகள் நால்வருக்கு வீர அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளை புலிகள் இயக்கம் ஒட்டியுள்ளது.

ஆகஸ்ட் 26 இல் கோட்டைமுனை சுற்றிவளைப்பில் வீரமரணமடைந்த லெப்டினன் அருள்ராஜ் (சுந்தரம்) — செப்டெம்பர் 3 ஆம் திகதி புதூர் சுற்றிவளைப்பில் வீரமரணமடைந்த ஜெகதீஸ்வரன் (தீசன்), கிங்சிலி (பயஸ்) நிராஜ் (வில்லியம்) ஆகியோருக்கே வீர அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. (உ-21)

## விளையாட்டரங்கு

### கரபந்தாட்ட போட்டி மீண்டும் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், அக்.14 யாழ் மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வந்த கரபந்தாட்டப் போட்டிகள் மீண்டும் இம்மாதம் 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாக உள்ளன.

இம்மூன்று நாட்களிலும் யாழ் பல்கலைக்கழக அணி நீர்வேலி பறக்கும் கழுகுகள் அணி, திரு நெல்வேலி சிவன் விளையாட்டுக்கழகம், மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம், காங்கேசன் ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக 'ஏ' 'பீ' அணிகள், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆகியவை 'நொக அவுட்' முறையில் மோத உள்ளன.

போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் மாவட்ட கரபந்தாட்ட சங்க உப தலைவர் கப்ரின் டீ. ஏ. எம். குணசிங்கம் செய்துள்ளார். (இ)

### மணற்காடு இல்ல போட்டி

பருத்தித்துறை, அக்.14 மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் சனிக்கிழமை வித்தியாலய அதிபர் திரு. எம். யேசுதாசனின் தலைமையில் நடைபெற்றன.

இவ் விழாவை பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பொனிபஸ் அடிகளார் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினர். (இ-118)

### மாணவர் முன்னணி நடத்தும் விளையாட்டு விழா 25 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக்.14 இன்றைய காலகட்டத்தில் மாணவர்களின் பரஸ்பர புரிந்துணர்வையும், உடல்வள ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக மாணவர் முன்னணி மாபெரும் விளையாட்டு விழா ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இவ்விழாவில் இடம் பெறும் போட்டிகள் வருமாறு:-

1. பாடசாலை மாணவர்களுக்கிடையில் 20 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி.

2. பாடசாலை மாணவர்களுக்கிடையில் 20 வயதிற்குட்பட்டோருக்கான பெண்களுக்குரிய வலைப்பந்தாட்டப் போட்டி.

3. மாணவர்கள் பொது மக்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டி.

[மாணவர்கள், பொது மக்கள் என இரு பிரிவுகளாக தெரிவு செய்யப் படும்]

உதை பந்தாட்டம், வலைப்பந்தாட்டத்திற்கான விண்ணப்ப முடிவு இம்மாதம் 20 ஆம் திகதி ஆகும்.

போட்டிகள் 25 ஆம் திகதி ஆரம்பமாகும்.

மரதன் ஓட்டம்26ஆம் திகதி காலை 6. 30 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் ஆரம்பமாகும்.

இப்போட்டிகளில் சகல பாடசாலைகளும் பங்குபற்றும்படி கேட்கப் பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு செயலாளர், மறுமலர்ச்சிக் கழகம், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப் பட்டுள்ளது. (இ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## யாழ் பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,அக்.14 யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள் இல்லாதநிலை நிலவுகிறது. ஆகவே இப் பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை உடனடியாக நியமிக்கவும்.

வடமாகாண ஆசிரியர் சங்கம் வடமாநில கல்வித் திணைக்களத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

மாவட்ட செயலாளர் திரு. வே. சிவராசா இது தொடர்பாக சமர்ப்பித்த இம்மகஜிரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

நிரந்தர அதிபர்கள் இல்லாதமை பிரபல பாடசாலைகளில் கூடச் சர்வசாதாரணநிலை.

இன்று பாடசாலைகளின் வளர்ச்சியில் அதிபர்களின் பங்களிப்பு மிக உன்னத இடத்தை வகிக்கிறது.

பதிலதிபர்களை வெற்றிடங்களுக்கு நியமிக்கும் முறையை எமது சங்கம வன்மையாகக் கண்டிக்கிறது. ஆசிரியர்களுக்கு ஏனைய அரசாங்க ஊழியர்கள் போன்று பதவி உயர்வு வாய்ப்புகள் கிடைபதில்லை.

பதிலதிபர் நியமனங்களால் ஆசிரியர்களுக்கு கிடைக்கக்கூடிய சிறிதளவு வாய்ப்பும் மறுக்கப் படுகிறது. அதுமட்டுமல்லாமல் பதிலதிபர் நியமனத்தில் பல குளறுபடிகள் நிலவுகின்றன. தகுதிபெற்ற சேவைமூப்புள்ளவர்கள் உதாசினஞ் செய்யப்படுகிருர்கள். இதனுலே பல சிரேஷ்ட ஆசிரியர்கள் மத்தியில் கசப்புணர்வும் விரக்தியும் நிலவுகறது.

தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் இவ்வாறு குறுகிய காலசேவைக்கு மட்டும் பதிலதிபர்கள் நியமிக்கப்படலாம்

அவ்வாறு நியமனம் வழங்குமிடத்து பிறபாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யலாகாது. குறிப்பிட்ட பாடசாலையில் சிரேஷ்ட ஆசிரியர்களுக்கு வரிசை முறைப் படி பதிலதிபர் நியமனம் வழங்கப்படுவது அவசியமாகும்.

இவ்வாறு திரு. சிவராசா மகஜரில் வலியுறுத்தி உள்ளார். (உ-9)

முரசுமோட்டை பொருட்காட்சியில் மில்க்வைற் சகாய விற்பனை

16, 17-10-86 பரந்தன்-முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயத்தில் நடைபெறும் பொருட்காட்சியில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனை நிலையத்தில் ரூபா 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அறிவு நூல்கள், ஸ்ரிக்கர், மில்க்வைற் செய்தி, கீரை விதைகள், பொலித்தீன் பாக் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்.

### பொருட்காட்சி

புங்குடுதீவு. அக். 14 புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலையின் கல்விக் கண்காட்சி புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு. வி.தங்கராசா பிரதம அதிபதியாகக் கலந்து கொண்டார். (இ - 131)

### கலாசார போட்டி

கிளிநொச்சி. அக். 14 தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி அமைப்பினுல் நடத்தப்பட்ட மாவட்ட கலாசாரப் போட்டி கடந்த ஆரும் திகதி பரந்தன் குமரபுரம் இந்து மகா வித்தியாலயத்தில் நடை பெற்றது. (இ - 76)

### தீவுப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல்

வேலணை அக் 14 தீவுப்பகுதியில் வயிற்றுளைவு நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் வேகமாக பரவத்தொடங்கியுள்ளன. பாதிக்கப் பட்டோர் பெரும் எண்ணிக்கையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிருர்கள். (இ-167)

### திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம்.அக்.14 அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் மழை வேண்டி தொடர்ந்து பல ஆலயங்களில் திருமுறைப் பாராயணம் செய்து வருகின்றனர்.

### விழிப்புலன் அற்ருேர் தினம்

சாவகச்சேரி, அக்.14 சாவகச்சேரி லயன்ஸ் கழகம் விழிப்புலன் அற்ருேர் வெள்ளைப் பிரம்பு தினத்தை இம்மாதம் 15ம் திகதியன்று கொண்டாட இருக்கிறது.

சுமார் அரை மைல் நீள ஊர்வலம் ஒன்றை நடத்துவதுடன் சந்தை மைதானத்தில் பொதுக் கூட்டமொன்றையும் நடத்தி பதினைந்து விழிப் புலனற்ருேருக்கு வெள்ளைப் பிரம்புகளை வழங்கவும் இருக்கிறது. (உ-31)

## கலை, கலாசாரம் வளர கிராம மட்டத்தில் முயற்சி அவசியம் என வலியுறுத்து

கரவெட்டி, அக் 14 தமிழ் கலை, கலாசார பாரம்பரியங்கள் பேணிப் பாதுகாத்து வளர்க்கப் படவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை கிராமங்கள்தோறும் இயங்கிவரும் சமூக சேவை, கலாசார நிலையங்கள் மேற்கொள்ளவேண்டும்.

இந்தவகையில் நாவலர் மடம் ஆரம்ப சுகாதார நிலையம் இக்கிராமத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு நாவலர் மடம் ஆரம்ப சுகாதார நிலையத்தால் நடத்தப் பட்ட கலை விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலிதகுமார் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு இளைப்பாறிய மேல் நீதிமன்ற பதிவாளர் வீ.கே. விஸ்வலிங்கம் தலைமை வகித்தார்.

டாக்டர் லலிதகுமார் மேலும் குறிப்பிடுகையில் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரமும் கிராமிய அபிவிருத்தியும்மேம் படுத்தப்படுவதற்கு கிராமியப்பகுதிகளில் கல்வி, கலை, கலாசார, சுகாதார, பொருளாதார நடவடிக்கைகள் மேம் படுத்தப்பட வேண்டியது முக்கியமாகும்.

பத்திரிகையாளர் திரு. வே. கனகசபை, அதிபர் திரு. ஏ. கணேசன், குடும்பநல சேவகர் செல்வி கே. பேரின்பநாயகி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (உ-எ)

## நீரிழிவு நோயாளர் குழுக்கோஸ் சத்தை தவிர்க்க வேண்டும்

யாழ்ப்பாணம். அக். 14 நீரிழிவு நோயாளர்கள் குளுக்கோஸ் சத்து இல்லாமல் பானம் அருந்துவதுதான் மிகச் சிறந்தது யாழ் போதனு வைத்தியசாலை வைத்திய கலாநிதி ஜேம்ஸ் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த 12-10-86 உதயன் ஞாயிறு இதழில் இதே பக்கத்தில் வெளிவந்திருந்த செய்தி ஒன்றில் "நீரிழிவு நோயாளர்களுக்கு குழுக்கோஸ் சத்து மிகச் சிறந்தது" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது தவருனது என்றும் குளுக்கோஸ் சத்து இல்லாமல் பானம் அருந்துவதுதான் சிறந்தது" என்பதே சரியானது என்றும் கலாநிதி ஜேம்ஸ் விளக்கினுர். (இ)

## உரும்பராயில் பெற்ருேர் தின விழாவும் குழாய் நீர் அங்குரார்ப்பண வைபமும்

யாழ்ப்பாணம், அக். 14 உரும்பராய் ருேமான் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் பெற்ருேர் தினவிழாவும் குழாய் நீர் அங்குரார்ப்பண வைபவமும் அண்மையில் பாடசாலை திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றன.

அதிபர் திரு. சா. சிங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா அருட்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகள், அருட்திரு. போல் நட்சத்திரம் அடிகள், உரும்பராய் சைவத் தமிழ்க் கலவன் வித்தியாலய உப அதிபர் திரு. அ. பஞ்சாச்சரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் குறைபாடுகள் பற்றி யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை முன்னுள் உறுப்பினர் திரு. அ. இராசேந்திரம் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர் பழைய மாணவர். உரும் [illegible] ளர்கள் ஆகியோரின் [illegible]

### நூலகத் திறப்பு விழா

சாவகச்சேரி, அக். 14 அறவழிப் போராட்டக் குழுவினரால் சிங்கைநகர் பாலர் பாடசாலை மண்டபத்தில் இம் மாதம் 15 ஆம் திகதி நிறுவப்படும் நூலகத் திறப்பு விழாவும் அறவழி கிராமிய கருத்தரங்கும் நாளை புதன்கிழமை நடைபெறும்.

அறவழிப் பாலர் கழகத் தலைவி திருமதி சரஸ்வதி பகவத்சிங் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் கல்வி இயக்குநர் திரு. வி. எஸ். துரைராசா, நிர்வாக இயக்குநர் திரு. க. ஜீவகதாஸ் அகதிப் பணி இயக்குநர் திரு. எஸ் தங்கராசா, திரு. வீ. ஜீ. தங்கவேல் முதலானேர் பங்குபற்றிக் கருத்துரைகள் வழங்குவார்கள்.

தொடர்ந்து கலந்துரையாடல், நூலகத் திறப்பு விழா அவதானிப்பாளர் உரை ஆகியவை இடம்பெறும். [illegible] நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ-எ)

### கட்டுரைப் போட்டி

பலாலி, அக். 14 'யுனஸ்கோ' வின் 40 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பாடசாலைகள் மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும், அகில இலங்கை ரீதியாகவும் ஜி. சி. ஈ. சாதாரண தர, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கிடையில் கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (இ-119)

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

மைக்ரே கொம்யூனிக்கேசன் ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்ருர்கள்.

உங்கள் தேவையே எங்கள சேவை

மைக்ரே கொம்யூனிக்கேசன்

கே.கே.எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி ● குவைத் ● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (ஏயார் போட் கிளினேர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்புக்கு விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்

பஸ் இல: 764 பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

தொடர்பு: N. பாலா திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு,

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.
* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

வாழ்க்கையின் குறிக்கோள் ஆத்மானுபூதி அடைதல் இதை எப்பொழுதும் மறவாதே. இதை அடைந்துவிடு.

— சுவாமி சிவானந்தர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - ஒருமைப்பாடு
இல. 15 வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
14-10-1986 த.பெ. இல. 23

## உலகமே, உலக நாடுகளே!

ஷெல் குண்டு பாய்ந்து நிறைமாதக் கர்ப்பிணி வயிறு பிளந்து மரணமானர். குடலும், சிசுவும் வெளியே வந்த நிலையில் அவர் பரிதாபச் சாவைத் தேட நேர்ந்தது. இந்த மரணம் கல்மனதையும் கசிய வைக்க வல்லது.

அந்தக் கர்ப்பிணி போர்க் களத்துக்குச் செல்லவில்லை. வெளியால் வீதிக்குக் கூடச் செல்லவில்லை. தனது வீட்டில் இருந்த வேளை, கடலில் இருந்து ஏவப்பட்ட ஷெல் அவரது வீட்டில் விழுந்து அவரையும், அவரது சிசுவையும் கொன்றுவிட்டது.

நெஞ்சை உருக்கும் விதத்தில் கொலையுண்ட அந்தத் தாயும் சிசுவும் அரசாங்கத்தினல் நிச்சயம் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

போராளிகளைத் தாக்குகிறேம், மடக்குகிறேம் என்று கூறி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் அரச பயங்கரவாதத்துக்கு எப்போது முற்றுப் புள்ளி வைக்கப்படும்?

பொதுமக்கள் வாழும் குடியிருப்புப் பிரதேசங்களில் படை முகாம்களை அமைத்துத் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் இந்த அரக்கத்தனம் எப்போது நிற்கப்போகிறது?

போர் என்றல் போர் சமாதானம் என்றல் சமாதானம் என்று விறுமொழி பேசியவரின் தலைமையில் உள்ள அரசாங்கம் நடத்தும் இந்தக் கோழைத்தனத்தைத் தட்டிக் கேட்பவர் யார்?

சமாதானம், பேச்சுவார்த்தை தீர்வு என்று கூறியவாறே அப்பாவித் தமிழ் மக்களை ஷெல்லும், பீரங்கியும் கொண்டு அழித்து வரும் அதர்மம் தான் சிங்களச் ஸ்ரீலங்காவின் தர்மிஷ்டமா?

உலகமே, உலக நாடுகளே, உலக மன்றங்களே, மனிதாபிமானம் உள்ள மானுடர்களே அப்பாவித் தமிழ் மக்களை அழித்துக் கொண்டே சமாதானம் பேசும் — அக்கிரமம் புரியும்— அநியாயம் செய்யும் — பொய் கூறும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தை நம்பாதீர்கள்.

அந்த அரசு சொல்வது அத்தனையும் சுத்தப் பொய். செய்வது அத்தனையும் அக்கிரமம். மனித குலத்துக்கே ஒவ்வாத அரக்கத்தனம். வீட்டில் இருந்த நிறைமாதக் கர்ப்பிணியின் அநியாயச் சாவை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். அது ஒரேயொரு சம்பவம் என்று நினையாதீர்கள்.

ஈழத் தமிழர் வாழும் தமிழ் மண் எங்கும் நாளாந்தம் அதே போன்று கணக்கில் எடுக்க இயலாத மரணங்கள் நிகழ்கின்றன. அத்தனை பேரையும் போராளிகள் என்று சமன்பாடு போட்டுக் காட்டி உலகத்தை ஏமாற்றுகிறது சிங்கள அரசு.

எண்ணிக்கையில் அதிகமானவர்கள் —வலியவர்கள் சிறுபான்மையினரை— மெலியாரை அடக்கி ஒடுக்கி, அழித்து விடலாம் என்பதே புதிய நீதி என்று பாடம் போடுகிறது ஸ்ரீலங்கா அரசு.

உலகமே உனக்கு இது புரியவில்லையா! சமத்துவம், சமநீதி, மனிதாபிமானம், மானுட நேயம், சமாதானம், சகவாழ்வு, சகோதரத்துவம் என்றெல்லாம் தத்துவம் பேசும் உலகமே, ஸ்ரீலங்கா அரசின் அரக்கத்தனத்தை உன்னல் புரிந்துகொள்ள முடியவில்லையா?

அதன் வெறும் வார்த்தை ஜாலங்களில் ஏமாந்து நிற்கிறயே. தர்மத்தையும் அதர்மத்தையும் உன்னல் பகுத்து உணர முடியவில்லையா? மானிடத்திற்கும் அரக்கத்தனத்துக்கும் வித்தியாசம் காணமுடியவில்லையா?

உலகமே, உலக நாடுகளே பக்கசார்பின்றி விஷயங்களை ஆராய்ந்து அறியக்கூடிய கனவான்களை உங்கள் பிரதிநிதிகளாக இந்த நாட்டுக்கு அனுப்புங்கள். சுயேச்சையாக கருத்தைத் தெரிவிக்கக்கூடியவர்களை அனுப்புங்கள். உண்மையாக இங்கு என்ன நடக்கிறது என்பதை அவர்கள் மூலம் அறியுங்கள்.

அப்போதுதான் இங்கு நடப்பது உங்களுக்குச் சரியாகத் தெரியவரும். சிங்கள—தமிழ் மக்கள் சேர்ந்து வாழக்கூடிய ஒரு நிலை இருக்கிறதா அல்லது இருசாராரையும் அரசாங்கம் மேன்மேலும் பிரித்துவைக்கிறதா என்பது புரியும்.

தமிழினம் திட்டமிட்டு அழிக்கப்படுவது நன்கு புலனுகும். அரசு அந்த இலக்கை நோக்கியே ஒவ்வொரு காலடியையும் முன்னெடுத்து வைக்கிறது என்பது தெளிவாகும்.

உண்மைநிலையைத் தெரிந்து கொண்ட பின்னர் ஒரு சிறுபான்மை இனம் அழிக்கப்படுவதை அனுமதிக்கலாமா என்று நீங்களே முடிவு செய்யுங்கள். அதற்கு உடந்தையாக இருப்பதா என்பதையும் நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

மேற்கு நாடுகளே, நீங்கள் ஸ்ரீலங்காவுக்கு அபிவிருத்தி வேலைகளுக்கென வழங்கும் பணம், பாதுகாப்புச் செலவினமாக மாறி, தமிழர்களை அழிப்பதற்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

சிறுபான்மை இனம் ஒன்று அழித்தொழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த உலக அரங்குகளில் குரல் கொடுக வேண்டியது அவசியம் என்பதை நீங்களே உணர்வீர்கள். இது ஓர் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல; மனித அழிப்புப் பிரச்சினை என்பதனைப் புரிவீர்கள்.

# இந்தியா விவகாரத்தில் பாகிஸ்தான் தலையீடு

## ராஜீவ் மீண்டும் குற்றச்சாட்டு

புதுடில்லி, அக். 13

**இந்தியாவின் உள்நாட்டுவிவகாரங்களில் பாகிஸ்தானின் தலையீடு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இதனை பாகிஸ்தான் கவனத்தில் கொள்ளவேண்டும்.**

இவ்வாறு பிரதமர் ராஜீவ்காந்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய எல்லைக்கு அப்பால் பல முகாம்களை அமைத்து பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளித்து இந்தியாவினுள் அனுப்பி வைக்கிறது. இதனல் பஞ்சாபில் பல பிரச்சினைகள் உருவாவதற்கு பாகிஸ்தான் வழிகோலுகின்றது. இதற்கான ஆதாரங்கள் இந்தியாவிடம் இருக்கின்றது.

பாகிஸ்தான் அணுஆயுத உற்பத்தியிலும் அதிக ஆர்வம் காட்டிவருகின்றது. இதனல் துணைக்கண்டத்தில் மிகவும் ஆபத்தான நிலைமை உருவாகிவிடும் எனவும் எச்சரிக்கவேண்டியது இந்தியாவின் கடமையாகும்.

அணுஆயுத உற்பத்தியை இந்தியா என்றுமே விரும்பவும் மாட்டாது. அதன் அழிவுப்பாதையில் செல்லவும் மாட்டாது. இவ்வாறு ராஜீவ் தெரிவித்தார். (ஒ)

### பஸ் விபத்து

காந்திநகர், அக்.13

குஜராத்தில் பஸ் வண்டியொன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் 7 பேர் கொல்லப்பட்டனர். 23 பேர் காயமடைந்தனர். (ஒ)

## வெளி உலகில்

### அஸாம் வெள்ள நிலை

திஸ்பூர், அக். 13

அஸாம் மாநிலத்தில் வெள்ளப் பாதிப்பு அதிகரித்து வருவதால் உதவிப் பணிகளுக்காக இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.

இந்திய விமானப்படையினர் வெள்ள அகதிகளுக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டுவருவதுடன் பாதுகாப்பான பகுதிகளுக்கும் அவர்களை எடுத்துச் செல்கின்றனர்.

78 ஆயிரம் குடும்பங்கள் 96 முகாம்களில் இதுவரை தஞ்சமடைந்துள்ளன.

அஸாம் மாநில முதல்வர் பப்புலகுமார்மகந்தா பாதிப்படைந்த பகுதிகளை விமானமூலம் பார்வையிட்டார். (ஒ)

### 6 தலைவர்கள் சந்தித்தனர்

மொபிட்டு. அக். 13

தென் ஆபிரிக்க முன்னரங்கு நாடுகளின் ஆறு தலைவர்கள் மொஸாம்பிக்கில் சந்தித்தனர்.

இந்த ஒருநாள் சந்திப்பில் பிராந்திய பாதுகாப்பு பற்றி ஆலோசிக்கப்பட்டது.

மொஸாம்பிக் ஜனதிபதி ஸாமோரா மைக்கலின் ஆட்சியை கவிழ்த்து மொஸாம்பிக்கை கைப்பற்ற தென் ஆபிரிக்கா சதி வேலைகளில் ஈடுபடுவதாக இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

தெற்கு ஆபிரிக்க நிலைமை சீர்குலைந்து வருவதற்கு மொஸாம்பிக் தான் காரணம் என்ற குற்றச் சாட்டும் மறுக்கப் பட்டது. (ஒ)

### பங்களாதேஷில் குண்டுகள் வெடிப்பு

டாச்கா, அக். 13

பங்களாதேஷில் வெடிகுண்டுகள் தயாரிக்கும் சட்டவிரோத முயற்சி ஒன்றினல் ஏற்பட்ட வெடிவிபத்தினல் நால்வர் கொல்லப்பட்டனர் 100க்கும் அதிகமானேர் படுகாயமடைந்தனர்.

பங்களாதேஷில் பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் இந்த வெடிகுண்டு விபத்து ஏற்பட்டது.

பங்களாதேஷின் வேறோர்இடத்தில் ஜனதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் குண்டுகள் வீசப்பட்டதால் இரு பிரபல அரசியல்வாதிகள் உட்படப் பலர்மரணமாகியுள்ளனர்.

பஸ்மீது வீசப்பட்ட குண்டினல் 60 பேர் பலியாகியுள்ளார்கள்.

தலைநகர் டாக்காவில் மட்டும் சுமார் 60 க்கும் மேற்பட்டவர்கள் குண்டுகளை வைத்திருந்ததாக கைதுசெய்யப்பட்டனர். (ஒ)

## விமான விபத்து குழு அறிக்கை வெளியீடு

ஒட்டாவா, அக். 13

கடந்தவருடம் அத்திலாந்திக் சமுத்திரத்தில் வெடித்துச் சிதறிய கனிஷ்டா விமான விபத்தின் விசாரணைக்கமிஷன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

உயர் நீதியரசர் வி. என். கிருபால் தலைமையிலான விசாரணைக்குழு தனது அறிக்கையில் மிகவும் சக்திவாய்ந்த வெடிகுண்டினல் தகர்க்கப்பட்டதாகவும், கனடாவில் இருந்து செயற்படும் இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதிகளின் சதிமுயற்சியென்றும் தெரிவித்தது.

சர்வதேச விமான சேவை நிறுவனமும், சர்வதேச விமானப் போக்குவரத்துச் சம்மேளனமும் விமான நிலையங்களில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கருத்து வெளியிட்டது.

இந்த அறிக்கை 179 பக்கங்களில் அமைந்தது. (ஒ)

### ஈராக்கில் தஞ்சம்

பக்தாத், அக். 13

தென் கொரியாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட 129 ஈரானிய வீரர்களில் நால்வர் சியோல் விமான நிலையத்திலில் தலைமறைவாகியதாக அறிவிக்கப்பட்டது.

அந்த நால்வரையும் ஈராக் பாதுகாப்பு வழங்கித் தஞ்சமளித்திருப்பதாக ஈராக் வானெலி செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ)

### உதவிப் பணிகள் ஆரம்பித்தன

கார்ட்டும் அக். 13

தெற்குச் சூடானில் பஞ்ச உதவிப்பணிகள் தாமதமாகத் தொடங்கியுள்ளன. அந்தப் பகுதியில் உள்ள உள்நாட்டுக் கலகம் காரணமாக உதவிப் பணிகள் மூன்றுவாரகாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

எந்தவிதமான விமானச் சேவைகளும் இப்பகுதியிலிந்து பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சூடானிய அரசால் இதுவரை தடுக்கப்பட்டிருந்தது. (ஒ)

### ராஜீவிற்கு வரவேற்பு

ஜகார்த்தா. அக். 13

இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி தனது நான்கு நாடுகளுக்கான எட்டுநாள் விஜயத்தின் முதல் கட்டமாக இந்தோனேஷியா வந்தார்.

சம்பிரதாயத்துக்கு மாருக ஜனதிபதி சுகார்டோ விமான நிலையம் சென்று வரவேற்றர்.

விமான நிலையத்திலிருந்து ஜனதிபதி சுகார்டோவுடன் மெற்றிக்கா அரண்மனைக்குச் சென்றர்.

இன்று செவ்வாய்க்கிழமை ராஜீவ் ஆவுஸ்திரேலியா புறப்படுவார். (ஒ)

### ஸ்டார் வார்ஸ முட்டுக்கட்டை

ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக அமெரிக்க ஜனதிபதி றேகனுக்கும் ரஷ்யத்தலைவர் கோபர்ச்சேவிற்குமிடையே நடைபெற்ற சந்திப்பு இணக்கம் காணப்படவில்லை.

'ஸ்டார்வார்ஸ' எனப்படும் அமெரிக்க ராணுவ துறைப் பாதுகாப்பு முன்முயற்சி குறித்துத் தோன்றிய வாக்குவாதத்தைத் தொடர்ந்து அந்தப் பேச்சுக்கள் கைவிடப்பட்டன.

ஐஸ்லாந்தின் தலைநகரில் நடைபெற்ற 11 மணித்தியாலப் பேச்சுக்களின்போது ஆயுதக்கட்டுப்பாட்டுத் திட்டத்தில் கருத்து ஒற்றுமைகொண்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனல் றேகனின் விண்வெளிப் போராட்டத் திட்டம்தான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்பாட்டிற்குப் பெரும் தடையாக அமைந்தது எனவும் கருத்து வெளியிடப்பட்டது. (ஒ)

## 22 கைதிகள் தப்பி ஓடினர்

ஜெய்ப்பூர், அக். 13

ராஜஸ்தான் மத்திய சிறையில் இருந்து 22 கைதிகள் நேற்றிரவு தப்பியோடினர்கள்.

பலதரப்பட்ட குற்றங்களுக்காக இவர்கள்சிறைத் தண்டனை அனுபவித்து வந்தார்கள்.

ராஜஸ்தான் பொலீஸார் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் பெரும் அளவில் ஈடுபட்டுள்ளனர்.

சிறைக் காவலாளிகளிடமிருந்து சாவிகளைப் பலவந்தமாகப் பறித்தபின்னர் அவர்கள் தப்பி ஓடினர். (ஒ)

### போர்கால அடிப்படையில் உதவி

சான்சல்வடோர்.அக்.13

எல்சல்வடோரில்உதவி மற்றும் மீட்புப் பணிகள் போர்க் கால அடிப்படையில் நடைபெறுகின்றன.

வெளிநாடுகளிலிருந்து மருத்துவ உதவிகள் கூடாரங்கள் வந்து குவிகின்றன.

அமெரிக்கா,பிரிட்டன், மெக்ஸிக்கோ, லத்தீன் அமெரிக்க நாடுகள் பல உதவிகளை வழங்கி வருகின்றன. (ஒ)

### இந்திய செய்மதி

மாஸ்கோ, அக். 13

1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்திய செய்மதியொன்று ரஷ்ய ஏவுகணை மூலம் விண்வெளிக்கு அனுப்பப்படும்.

ரஷ்ய ஏவுகணைள் மூலம் அனுப்பப்படும நான்காவது செய்மதி இதுவாகும்.

1975 ஆர்ய பாட்டாவும் 79ல் பாஸ்கார ஒன்றும் 82ல் பாஸ்கார இரண்டும் செலுத்தப் பட்டன.

ரஷ்யாவில் உள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்து ஐ ஆர்எல் 1 என்ற 1000 கிலோ எடையுள்ள கலம் செப்டம்பரில் அனுப்பப்படும். (ஒ)

# வயாவிளான் மாணவர் அவலம் தொடர்கிறது

## போதிய இட வசதி இல்லை

யாழ்ப்பாணம், அக். 14

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் கஷ்டநிலை தொடர்கிறது.

வயாவிளான் பிரசைகள் குழு உறுப்பினர் திரு. எஸ். நாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய மகா வித்தியாலயம் மினி இராணுவ முகாமாக மாறியதைத் தொடர்ந்து கல்லூரி தற்காலிகமாக புன்னலைக்கட்டுவன் ஆயாக்கடைவை அரசினர் மகா வித்தியாலத்தில் நடைபெற்று வருகிறது.

அங்கே போதிய இட வசதிகள், கூரைவசதிகள் இல்லை. இதனல் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறர்கள்.

மேலும் மழைக்காலம் ஆரம்பித்திருப்பதால் அவர்களது நிலைமேலும் மோசமடைந்துள்ளது.

இந்நிலையில் அங்கு கடமை புரிந்த ஆய்வு கூட உதவியாளர் லிகிதர் இருவரையும் கல்வித் திணைக்களம் இடம் மாற்றியுள்ளது.

அவர்களை மீண்டும் வயாவிளான் மகா வித்தியாலயத்திற்குக் கடமை புரிய இடமாற்றும்படி கல்லூரி அபிவிருத்திச் சபையும், பழைய மாணவர் சங்கமும் கல்விப் பணிப்பணிப்பாளரைக் கேட்டுக்கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ.5)

### ஆட்சேபித்து மகஜர்

யாழ்ப்பாணம் அக். 14

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் கட்டண விகித நிர்ணய சபையின் அங்கீகாரம் பெருமல் திடீரென சகல பாதைகளிலும் கட்டணத்தை அதிகரித்துள்ளது கண்டிக்கப்பட வேண்டியது. அத்துடன் கிரிமலை போன்ற பகுதிகளுக்கு பஸ்சேவைகிடைக்காதிருந்தபொழுதிலும் கட்டணம் அதிகரிப்பு ஆச்சரியமளிக்கிறது.

இவ்வாறு வடபிராந்திய பயணிகள் நலன் புரிச்சங்கத்தலைவர் திரு. செ. குமாரஸ்வாமி ஆட்சேபம் தெரிவித்து மகஜர் அனுப்பியுள்ளார்.

இம்மகஜர் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவருக்குஅனுப்பப்பட்டது. (ஒ)

## படையினர் பாவிப்பின்போது

## சேதம் அடையும் சொத்துக்கள் மற்றும் வாகனங்களுக்கு நஷ்டஈடு

கொழும்பு, அக். 14

அரச படையினரால் பயன்படுத்தப்படும் போது சேதமடைந்த பொது மக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் வாகனங்களுக்கும் மோதலின்போது காயமடைந்த சிவிலியன்களானசாரதிகள்கிளீனர்கள் உயிரிழந்த சிவிலியன்கள் ஆகியோருக்கும் நஷ்டஈடு வழங்க அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

இது சம்பந்தமாக ஜனதிபதி ஜெயவர்த்தன சமர்ப்பித்த திட்டத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

சேதமடைந்த சொத்துககளுக்கான நஷ்டஈடு பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின்படி வழங்கப்படும்.

வாகனங்களுக்கான நஷ்டஈடாக காப்புறுதி செய்யப்பட்ட தொகை [illegible] மோட்டார்வாகன ஆணையாளரின் மதிப்பின்படி நஷ்டஈடு வழங்கப்படும்.

இறக்கும் சிவிலியன்களுக்கான நஷ்டஈடாக ஊர்காவல்படை துணைப் படையினருக்கு வழங்கப்படும் தொகையே கொடுக்கப்படும். உயிரிழந்தவர்களைப்பொறுத்தவரையில் அவர்களின் உறவினர்களுக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படும். (இ—எ)

### ராமகிருஷ்ண ஜெயந்தி விழா

பருத்தித்துறை அக்.14

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரயத்தில் ஸ்ரீ ராமகிஷ்ண ஜெயந்தி விழா தொடர்பான நிகழ்ச்சிகள் இம்மாதம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் [illegible] (இ—118)

## பொய்யாமொழி



குறள்:

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

பொருள்:

உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டுவிட்டால், மொட்டை அடித்தலும் சடை வளர்த்தலுமாகிய புறக் கோலங்களும் வேண்டா.

## பனம் பொருள் எம் நாட்டின் பரம்பொருள்

### பயிற்சி நிலையத்தில் உரை

பலாலி, அக். 14

பனம்பொருள் எம் நாட்டின் பரம்பொருள். எமது மூதாதையர்களை நோயற்றவர்களாக வாழவைத்தது பனையே. இப்பனை வளத்தினை நாம் மருந்தாக, உணவாகப் பாதுகாப்பு அரணக, கூட பயன்படுத்தலாம். அதனல் தான் அது இறைவனுக்குச் சமமாக 'கற்பகதரு' என்ற பெயரைப் பெற்றது.

அச்சுவேலி— பத்தமேனி விபசி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி நிலையத்தில் உரையாற்றிய போது கோப்பாய் கல்வி அதிகாரி திரு. வ. தங்கராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்ட சபை முன்னள் தலைவர் திரு. ஆ. ந. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி ஆரம்ப விழாவில் பனை அபிவிருத்திச் சபையின் உதவி உற்பத்தி உத்தியோகத்தர் திரு. வீ. ரீ. தங்கவேலுவும் கலந்து உரையாற்றினர்.

திரு. தங்கராசா மேலும் உரையாற்றுகையில்;

நீரிழிவு நோயைத் தடுக்கும் 'இன்சுலின்' ஒடியலிலும் பனம் உணவு— பானங்களிலும் தேவையான அளவு உண்டு. ஒடியல்பிட்டும், நெத்தலி மீனும் தாய்ப்பால் சுரக்க சிறந்த உணவு வகை ஆகும். பசுப்பாலை அதிக அளவு சுரக்கச் செய்ய நம் முன்னேர் பனை ஓலையை பால் மாடுகளுக்கு வழங்கினர். பழுதாகிய ஒடியல், பனங்கிழங்கின் பீலி என்பன சிறந்த பால்மாட்டுத் தீனி என்பதை மிருக வியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.

இப்படி அவர் கூறினர்.

சுமார் 40க்கும் மேற்பட்டோர் இப்பயிற்சியில் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (இ—119)

### கப்பல் திருவிழா

பருத்தித்துறை அக். 14

நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய கப்பற் திருவிழா 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆலய முன்றலில் நடைபெறும். (இ—118)

## ஏழைகளுக்கு வீடு

கிளிநொச்சி, அக்.14

செவன உதவித் திட்டத்தின்கீழ் பளை, பூநகரி, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சுமார் 13 வீடுகளை ஏழை மக்களுக்குஅமைத்துக் கொடுக்க கிளிநொச்சி வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதன் அடிப்படையில் பளை — பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எட்டு வறியவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. (இ.76)

### வல்லிபுர ஆழ்வார் தேர்

பருத்தித்துறை அக்.14

துன்னலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய இரதோற்சவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை கடல் தீர்த்தோற்சவம் நடைபெறும் சனிக்கிழமை காலை கேணித்தீர்த்தோற்சவம் நடைபெறும். (உ—118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் குறைந்த செலவில்
உங்கள் புகைப்பட நெகட்டிவிலிருந்து
இதற்கென தருவிக்கப்பட்ட
கருவிமூலம் வீடியோ படங்களாக
மாற்றித் தருகின்றோம்.
விபரங்கட்கு:
எவர் விஷன்
21A, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

14 - 10 - 1986 செவ்வாய்க்கிழமை

உங்கள் மங்கள வைபவங்களை நவீன,
கம்யூட்டர் முறையில் இயங்கும் வீடியோக்
கமருமூலம் இத்துறையில் நீண்டகால அனு
பவம் பெற்றவர்களினல் படமாக்க தொட
ர்பு கொள்ளவும்.
எவர் விஷன்
21A, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

## வித்தாரம்

என்ன முரளி! உந்தப் பக்கத்தாலை வாருய் முகம் வாடி இருக்கு?...

உன்ரை முகம் என்ன காணுகின்ற எல்லோற்றை முகங்களும் வாடித்தான் இருக்கு. மன்னர் விக்ரரின் மரணத்தாலை தமிழ்மண்ணே வாடியிருக்குது எண்டு சொல்லலாம்.

சனம் தங்கடை சொந்தப் பிள்ளை செத்த மாதிரி சோகமாய் இருக்குதுகள். துக்கம் கொண்டாடுதுகள்.

விக்ரர் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர் எண்டதுக்காக இல்லை தமிழ் மண்ணுக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒரு தியாகி எண்டதற்காக.

எந்த இயக்கம் எண்டு பாத்து தியாகியை மதிக்கக் கூடாது எண்டு பெரியவர் ஒருவர் ரோட்டிலை நிண்டு பல பேருக்குச் சொன்னதை நான் என்ரை காதாலை கேட்டேன்.

அந்தப் பெரியவருக்கு இருக்கிற உணர்வு எல்லோருக்கும் வர வேணும். அரசாங்கம் என்னத்தையும் சொல்லலாம். இயக்கங்களிலை இருக்கிற தம்பிமாரும் பிழையள் விடலாம். அதைக் கண்டிக்கலாம்.

ஆனல் அவை தங்கடை உயிரைத் துறந்து மக்களுக்காகப் பாடுபடுறதை ஒருதரும் மறக்கக் கூடாது. அதுக்காக மக்கள் நன்றி சொல்ல வேணும்.

விக்ரரின் மரணம் வீர மரணம். எதிரியை நேர் கொண்டு மோதி நெஞ்சிலே சூடு வாங்கி வீர மரணம் அடைந்ததை நினைக்க உடம்பெல்லாம் புல்லரிக்கிறது. பண்டைய தமிழன் புறமுதுகு காட்டாது போரில் வீர மரணம் அடைந்த வரலாற்றுக் காட்சிகள் மனதில் படம் ஓடுகின்றன.

அந்த வீரத் தமிழ் மறவனுக்கு அஞ்சலி செலுத்தக் கூடிய சனத்தைப் பார்க்க கவலையில் ஒரு பகுதி போனதெண்டு தான் சொல்ல வேணும். தமிழ் மக்கள் நன்றி மறந்தவர்கள் அல்லர் என்பது கண்டு ஒரு சிறு மகிழ்ச்சியும் வந்தது

தமிழ் மக்கள் உரிமை கேட்கயில்லை, விடுதலை கேட்கயில்லை, போராளியள் தான் அரசாங்கத்தை எதிர்க்கினம், பயங்கரவாதம் புரியினம் போராளியளுக்கு மக்கள் ஆதரவு இல்லை எண்டு பத்தி பத்தியாக எழுதும் கொழும்புப்பத்திரிகைக் காரரைக் கூப்பிட்டு இந்தக் காட்சியளைக் காட்ட வேணும். அப்ப அவைக்குப் புரியும் தமிழ் மக்கள் என்ன கேட்கிருர்கள், யார் பக்கம் நிக்கிருர்கள் எண்டு.

உரிமைப் போராட்டத்திலை பார்வையாளராக எங்கடை மத்தியிலை இருக்க விரும்பும் சில கனத்த தலைக்காரருக்கும் இதைக் கண்ட பிறகாவது அசடு வழியுதோ பாப்போமே.

* * *

யாழ்ப்பாணத்திலை ரெலிபோன் தொடர்புகள் அடிக்கடி பழுதாப் போகுது. அதுகள் ஏதாவது 'ரெக்கினிக்கல்' காரணத்தாலை தான் பழுதாப்போகுதோ அல்லது சதி வேலையளோ.

* * *

வவுனியாவிலை நேற்று பின்னேரம் தொடக்கம் ஊரடங்கு போட்டவையல்லே. ஆனல் ஊரடங்கு போடத்தக்கதா அங்கை பெரிசா சம்பவம் ஏதும் நடந்ததா இல்லை. அப்பிடியெண்டா அதன் பின்னணி என்னவாயிருக்கும்..... வவுனியாவிலை இருந்து படையளை மன்னருக்கு அனுப்பத்தான் சிலவேளை ஊரடங்கு

# 6 அமைச்சர்கள், உயரதிகாரிகள் உட்படப் பலர்மீது விசாரணை

கொழும்பு, அக். 14

ஆறு அமைச்சர்கள், ஆறு கூட்டுத்தாபனத் தலைவர்கள், சில மாவட்ட அமைச்சர்கள், எம்.பிக்கள், உயர் அரச அதிகாரிகள் ஆகியோர் மீதான முறைப்பாடுகள் விசேஷ ஜனதிபதி ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் இரகசியப் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

சில முறைப்பாடுகள் குறித்து இரகசியப் பொலீஸார் குழு ஒன்று விசாரணை நடத்தி தனது அறிக்கையை விசேட ஜனதிபதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்து விட்டது.

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள், எம்.பிக்களில் சிலர் சிரேஷ்ட அரசியல்வாதிகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் கடற்ருெழில் அமைச்சின் முன்னுள் செயலாளர் திரு. அனுரா வீரரத்தினமீது 35 குற்றச்சாட்டுக்களை ஆணைக்குழு சுமத்தியுள்ளது.

சி. ஐ. டி. பொலீஸ் அதிகாரிகளின் அறிக்கையைத் தொடர்ந்தே இக் குற்றச் சாட்டுக்கள்சுமத்தப்பட்டுள்ளன.

திரு. அனுரா வீரரத்னவிடம் அவர் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆணைக்குழு விளக்கங்கள் கோரியுள்ளது.

நவம்பரில் ஆணைக்குழு தனது பகிரங்க விசாரணைகளை ஆரம்பிக்கும். (இ-எ)

# துட்டகைமுனுக்களின் வாய்வீரம் தெற்கில்தான்

## சமசமாஜக்கட்சிப் பிரமுகர் கூறுகிறர்

கொழும்பு, அக். 14

படிப்பறிவற்ற ஏழைச் சிங்கள இளைஞர்கள் தான் ஆயுதப்படையில் சேர்ந்து மரணமடைகின்றனர். நாட்டுக்காக உயிரிழப்போம் என்று முழக்கமிடும் 'துட்டகைமுனுக்கள்' வடக்கே செல்லமாட்டார்கள். அவர்களின் வரய் வீரம் தென் இலங்கையில் தான்.

லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகர் பேராசிரியர் கார்லோ பொன்சேகா குளியாப்பிட்டியில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் இப்படிச் சொன்ஞர்.

இனப்பிரச்சினை தமிழ், சிங்கள முதலாளித்துவ சக்திகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலாகும்.

சாதாரண சிங்கள, தமிழ் மக்கள் தாங்கள் வாழும் பிரதேசங்கள் குறித்து மோதவில்லை. அவர்கள் தங்கள் பிரதேசங்களில் அமைதியாக வாழவே விரும்புகின்றனர்.

பதவி ஆசை பிடித்த அரசியல்வாதிகள் தான் இன்றைய நிலைக்குக் காரணம்.

இனப்பிரச்சினைக்கு இரண்டு வழிகளில் தீர்வு காணலாம்.

ஒன்று இராணுவத் தீர்வு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர் அனைவரையும் கொல்வதே அது. இது நடக்க முடியாத ஒன்று.

இரண்டாவது அரசியல் தீர்வு காணவேண்டியது. பேச்சுக்கள் மூலம்தான் அரசியல் தீர்வு காணலாம்.

லங்கா சமசமாஜக் கட்சி மாகாணசபைத் திட்டத்தை 1984 இல் சர்வகட்சி மாநாட்டில் முன்வைத்தது. லாயத்தில் இருந்து குதிரை வெளியேறிய பின்னர் தான் அரசாங்கம் உண்மையை உணர்ந்து மாகாணசபை யோசனையைக் கொண்டு வந்தது.

இப்படி பேராசிரியர் கார்லோ பொன்சேகா தெரிவித்தார். (இ—எ)

# தமிழ் அகதிகள்

## அரச முகாமில் அரைப் பட்டினி!

யாழ்ப்பாணம், அக். 14

திருகோணமலையில் தமிழ் அகதிகளுக்கு அரசு நடத்தும் முகாமில் மத்தியானம் சோறு, இரவிலே ஒரு துண்டு பாண். காலையிலே ஒன்றும் இல்லை.

இப்படிச் சொன்ஞர் நாகமணி துரையம்மா என்ற பெண்.

இவர் திருமலை நிலாவெளி முகாமில் இருந்து தப்பி முல்லைத்தீவில் தஞ்சமடைந்து உள்ளார்.

முகாமில் இருந்து தப்பி 6 நாட்கள் காடுகளில் தங்கியிருந்தோம்.

பின்னர் சிலர் சேர்ந்து ஒரு மூடைநெல்லை 350 ரூபாவுக்கு வாங்கி குற்றி அரிசியாக்கி கஞ்சி வைத்துக் குடித்தோம்.

அதன் பின்னர் வள்ளம் ஒன்றில் ஏறி முல்லைத்தீவு வந்தோம் — இப்படி அவர் சொன்ஞர்.

சாம்பல்தீவு முற்றுகையின் போது ஷெல் தாக்குதலில் காயமடைந்த மூன்று தமிழ்ப் பெண்கள், இரண்டு சிறுமிகள் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பெயர்கள் வருமாறு:—

1. சரோஜினி அன்ரனி, (வயது 53) 7 பிள்ளைகளின் தாய்.
2. சித்திரவேலு லட்சுமி, (வயது 30)
3. சி. மைதிலி(4வயது)
4. கணேஷ் சாரதா தேவி(வயது 30)
5. கோணேஸ்வரி, (5 வயது ((அ—எ)

## ஷப்ரு ஆதரவு

# சமய அறிவு விஞடி விஞ போட்டி இறுதித்தெரிவு

## வெள்ளியன்று நடைபெறும்

யாழ்ப்பாணம் அக். 14

ஷப்ரு' ஆதரவில் நடைபெறும் சமய அறிவு விஞடி விஞப் போட்டியின் இறுதித் தெரிவு 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9–00 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

காலை 9-00 மணி அளவில் பூசைகளுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

பின்னர் திருமுறை ஓதல். போட்டி இறுதித் தெரிவு இடம்பெறும்.

திருமதி வசந்தா வைத்தியநாதனின் சொற்பொழிவைத் தொடர்ந்து நண்பகல் அளவில் பரிசளிப்பு இடம்பெறும். (இ-எ)

# 12 கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிவாரண உணவு இல்லை

யாழ்ப்பாணம் அக். 14

திருமலைப் பட்டினம் உட்பட பன்னிரண்டு கிராமங்களைச் சேர்ந்த அகதிகளுக்கு நிவாரண உணவுப் பொருள்கள் வழங்குவதை கடந்த மாதத்தில் இருந்து யாழ் மாவட்ட செயலகம் நிறுத்தியுள்ளது.

திருமலை மாவட்டத்தில் உள்ள அப்பன்னிரண்டு கிராமங்களும் வருமாறு;

திருக்கடலூர், சாம்பல்தீவு, ஆத்திமோட்டை, கற்சுனைக்கல், மூதூர், தம்பலகமம், லிங்கநகர், அன்புவழிபுரம், உப்புவெளி, பாலையூற்று, செல்வநாயகபுரம் திரியாய், திருமலைப்பட்டினம்.

மாதம் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே உணவுப் பொருள்கள் திருமலை மாவட்டத்தில் கீழ்க்கண்ட கிராம மக்களுக்கு வழங்கப்படும்;-

கோபாலபுரம் கும்புறுபிட்டி, நிலாவெளி, கட்டைப்பறிச்சான், கந்தளாய், சம்பூர்.

மாதம் நான்கு வாரங்களும் பின்வரும் திருமலை மாவட்டக் கிராமங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படும்;

பன்குளம், கன்னியா, தென்னமரவாடி, கிளிவெட்டி ஆரும் வாய்க்கால், கங்குவேலி நாமல்வத்தை, முதலிக்குளம் எட்டாம் வாய்க்கால், ஈச்சிலம்பத்தை. (உ—எ)

தேவைப்பட்டுதோ ....? அல்லது யாழ்ப்பாணம் வவுனியாவிலை இருந்து தம்பிமாரை மன்னருக்குப் போகாமல் தடுக்கிற திட்டமோ...

நாளை நாளையின்டைக்கு எல்லாம் தெரிய வரும் தானே....!

## அடம்பன்...

1–ம் பக்கத்தொடர்ச்சி)

டார் ஷெல்களும்.

7. கமாண்டோ மோட்டார் ஒன்று.
8. ஆர். பி. ஜி. 7 ஒன்று.
9. 2வோக்கி டோக்கிகள்.

அத்துடன் இரு சிப்பாய்களையும் எமது வீரர்கள் உயிருடன் கைது செய்துள்ளனர்.

—இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விக்ரர்...

(1–ம் பக்கத்தொடர்ச்சி)

ரருக்கு நேற்று பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

புலிகளின் முகாமில் இருந்து யாழ் பெரிய கோயிலுக்கு திறந்தவாகனத்தில் வைக்கப்பட்டு பூதவூடல்தாங்கியபேழை கொண்டுவரப்பட்டது.

ஆயுத வாகனங்கள் அணிவகுத்து வர வீதிகள் தோறும் மக்கள் கண்ணீர் மல்கி நிற்க அன்னரது பிரேத ஊர்வலம் நடைபெற்றது.

நேற்றுமாலை ஐந்துமுப்பது மணிஅளவில் பெரிய கோயிலுக்கு பூதவுடல் கொண்டுவரப் பட்டு அங்கு திருப்பலி பூசை நடத்தப் பட்டது.

அதன் பின்னர் தேவாலயத்தின்முன்பாக ஆயுதபாணிகளான புலிகள் அணி வகுத்து நிற்க ஆயிரக்கணக்கான மக்கள் விக்ரரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இறுதியில் மரியாதை வேட்டுக்களும் அங்கு தீர்க்கப்பட்டன. (உ—10)

## டாக்டர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டைந்தது.

ஆஸ்பத்திரிக்குள் இருந்தோ, அல்லது அருகில் இருந்தோ கோட்டை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவில்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகின்ருேம்.

ஆஸ்பத்திரிக் கட்டடம் இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டது என்று அரசு தொடர்பு சாதனங்கள் தவருக தெரிவித்தன. இது கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

இது சம்பந்தமாக எமது நிறுவனத்தின் இயக்குநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்.

இது தற்செயலாக நடந்த நிகழ்ச்சி என்று அவர்கள் அவருக்குத் தெரிவித்தனர்.

எந்த ஒரு கட்டத்திலும் போராளிகள் ஆஸ்பத்திரிக்குள் இருந்தார்கள் என்று அவர்கள் இயக்குநருக்குக் கூற வில்லை.

அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கோட்டை முகாமில் இருந்து பாதுகாப்புப் படையினர் வாபஸாவதே ஆஸ்பத்திரி ஊழியர் பாதுகாப்பாக பணிபுரிவதை உறுதிப்படுத்தக்கூடிய ஒரே ஒரு வழி.

ஆஸ்பத்திரி மீதான மோட்டோ தாக்குதலை கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ள நீங்கள் செய்ய வேண்டியது இதுவே.

ஆகவே கோட்டையில் இருந்துபாதுகாப்புப் படையினர் வாபஸாகும்வரை இன்றுதொடக்கம் தொடர் ஆட்சேப இயக்கம் ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளோம்.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது. (உ-எ-10)

# இலங்கை வங்கி கச்சேரிக் கிளை ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், அக். 14

இலங்கை வங்கிக் கச்சேரிக் கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு அக்டோபர் மாத ஓய்வூதியம் இம்மாதம் 18ஆம், 20ஆம் 21ஆம் திகதிகளில் யாழ் கோட்டை கொடுப்பனவுக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

யாழ் செயலக பொது சனத் தொடர்பு அதிகாரியான உதவி அரசாங்க அதிபர் திரு. த. குலசேகரம் இதனை அறிவித்திருக்கிருர்.

விவரம் வருமாறு;

18–10–1986 (சனி):— சிவில் ஆசிரியர் ஒய்வூதியம்.

20–10–1986 (திங்கள்) விதவைகள் ஒய்வூதியம்.

21–10–1986 (செவ்வாய்):— ஆசிரியர் விதவைகள், படைக் கல சேவிதர்கள், அவர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஒய்வூதியம்.

கொடுப்பனவுகள்காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 1மணி வரை வழங்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமை எவ்வித ஓய்வூதியமும் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ—எ)

# முஜிபர் கொலை நியாயமானது

டாக்கா, அக். 13

நாளை பங்களாதேஷில் நடைபெறவிருக்கும் ஜனதிபதி தேர்தல்களில் ஜனதிபதி ஏர்ஷாட்டை எதிர்த்துப் போட்டியிடும் முக்கிய வேட்பாளரான ஸயீட் பாரூக் ரஹ்மான் 1975 ல் தனது தலைமையில் நடந்த வங்கத் தந்தை ஷேக் முஜிபர் ரஹ்மானின் கொலை நியாயமானது எனப் பிரசாரம் செய்து வருகின்ருர். (ஓ)

## புதுக்குடி....

(1–ம்பக்கத் தொடர்ச்சி)

அடைந்தனர்.

இவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினத்திற்காகவே நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ரோந்து சென்ற சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

மற்றைய வாகனத்தில் வந்த சிப்பாய்களுடன் அரைமணி நேரமாக எமது போராளிகள் மோதிக் கொண்டதில் எமது தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை.

இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ—10)

## மன்ஞர்...

(1–ம்பக்கத் தொடர்ச்சி)

நடத்திக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியைச் சுற்றி குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் பறந்துகொண்டிருக்கக் காணப்பட்டன.

இதேவேளை கடந்த சனிக்கிழமை அடம்பனில் நடைபெற்ற குண்டு வீச்சுத் தாக்குதல்கள் காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது

அடம்பன் பகுதிகளில் பொதுமக்கள் காடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். (இ-10)

## ஹர்த்தால்...

(1–ம்பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அரச இராணுவ நடவடிக்கைகளினுல் நகரில் கடைகளை திறந்து வியாபாரம் நடத்துவதும் சாதாரண வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நிலையில் இன்றும் கடைகளைப் பூட்டுவது மக்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கும். இப்படிப் புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சூடுபட்டு இறந்த மகனுக்கான

# நஷ்டஈட்டைப் பெற தந்தையார் படும்பாடு!

யாழ்ப்பாணம், அக். 14

1984இல் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தொண்டமனுற்றைச் சேர்ந்த உதவி ஆங்கில ஆசிரியருக்குரிய நஷ்டஈட்டைப்பெற அவரின் தந்தையார் படும்பாடு இன்னும் பலனளிக்கவில்லை.

உயிரிழந்தவரின்பெயர் டி. ஏ. செல்லக்குமரன், தொண்டமனுறுவாசி.

22–12-84இல் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானுர்.

19-6–85 இல் வெளியிடப்பட்ட 296 ஆவது சுற்று நிருபப்படி, இவரின் தந்தையார் டி. அமிர்தலிங்கம் புனர்வாழ்வு அமைச்சுக்கு முறையிட்டார்.

புனர்வாழ்வு அமைச்சோ கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளும்படி தந்தையாருக்குப் பதிலனுப்பியது.

இயலாத நிலையில், தந்தை, பிரசைகள் இணைப்புக் குழுவிடம் முறையிட்டிருக்கிருர். (இ-எ)

# வானத்தாக்குதலில் லொறி எரிந்தது

யாழ்ப்பாணம், அக். 14

மொம்மர் விமானங்கள் நெல் ஏற்றிவந்த 3 லொறிகள் மீது குண்டு விசித் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்; மூன்று பேர் படுகாயமடைந்தனர். வவுனியாவிலிருந்து முற்கொண்டு கிடைத்த செய்திகள் இப்படித்தெரிவித்தன.

நேற்றுக்காலை இச் சம்பவம் தெண்ணியம்குளம் என்னுமிடத்துக்கும் கோட்டைக்கட்டி அம்பலம் பெருமாள் கோவிலுக்கு இடையிலும் இடம்பெற்றது.

துணுக்காயில் இருந்து யாழ்ப்பாணத்துக்குநெல் ஏற்றி வந்த 3 லொறிகளே இத்தாக்குதலுக்கு இலக்காகின.

இத் தாக்குதலில் ஒரு லொறி முற்ருக எரிந்தது. இரண்டு லொறிகள் சேதமடைந்தன. (உ-எ)

# செப்டெம்பரில் 92 தமிழர் மரணம்

யாழ்ப்பாணம், அக். 14

கடந்த செப்டெம்பர் மாதத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அசம்பாவிதங்களினுல் 92 தமிழர் உயிரிழந்தனர். மாவட்ட ரீதியிலான விவரம் வருமாறு:

மட்டக்களப்பு–51
திருகோணமலை–15
முல்லைத்தீவு–06
யாழ்ப்பாணம்–14
மன்ஞர்–03
வவுனியா–01
ஏனைய மாவட்டங்கள் –02

மொத்தம்–92

இத்தகவலை பிரசைகள் இணைப்புக்குழு அமைப்பாளர் திரு. எஸ். சிவானந்தராசா தெரிவித்தார். (உ—எ)

# மக்கள் ஆர்ப்பாட்டம்

பொன், அக் 13

மேற்கு ஜெர்மனியில் உள்ள ஏவுகணைத்தளம் ஒன்றை சுமார் ஒரு லட்சம் ஆர்ப்பாட்டக்காரர் முற்றுகையிட்டனர்.

மேற்கு ஜெர்மனியில் பல வருடங்களுக்குப் பின்பு ஏற்பட்ட பெரிய அணு ஆயுத எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இதுவாகும். (ஓ)

தமிழ் ஈழ ராணுவத்தின்
தமிழ் ஈழம் போர் நிதி
அதிஷ்ட லாப சீட்டு
மொத்தமாக விற்பனை செய்ய வட மாகாண விநியோகஸ்தருள் எம்மையும் நியமித்துள்ளார்கள் என்பதை பெருமகிழ்வுடன் அறியத்தருகின்ரேம்.
வீனஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சிறிதர் சினிமா அருகாமையில்)
விளம்பர அமைப்பு; மணிக்குரல் மேஜர் ஷண்

தேவை
பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு அனுபவம் உள்ள ஒப்புநோக்குநர்கள் (Proof Readers) தேவை.
மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
இரவு நேரங்களில் கடமையாற்றக் கூடிய சுகதேகிகளாக இருக்க வேண்டும்.
யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
உரிய சுய விவரங்களுடன் நற்சான்று பகரக்கூடிய இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு, 20–10–1986 திங்கட்கிழமைக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
விளம்பரதாரர்,
மே/பா உதயன்
த. பெ. இல: 23
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை, 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி:- 14 — 10 — 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N86